සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

**ஃ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**ஃ இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

1. சமூகப் பாதுகாப்பை வளர்த்தொடுப்பதற்கு தேவையான பின்புலத்தை ஒழுங்கமைக்கும் நிறுவனமாக ...................................... குறிப்பிடலாம்.
(குடும்பம்/பாடசாலை/சமூகநிறுவனங்கள்)

2. தமது நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வழிமுறைகளே ................................................ ஆகும்.
(தொழில்நுட்பம்/இயந்திரசாதனங்கள்/உபகரணங்கள்)

3. நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அதனை அடைவதற்காக ஒழுங்கு செய்யப்படும் வேலைத்திட்டம் ...................................... எனப்படும்.
(தேசிய பொருளாதாரம்/தேசியஅபிவிருத்தி/தேசிய கொள்கை)

4. இலங்கைப் பிரஜையொருவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்கும் வயது.......................... பூரணமாகி இருக்க வேண்டும்.
(21/35/18)

5. பண்டைய காலத்தில் கல்வி நடவடிக்கைகளின் போது எழுதுவத்காக ........................................ பயன்படுத்தப்பட்டதோடு பிற்காலத்தில் அது மாற்றமடைந்தள்ளது.
(கரும்பலகை/கற்பலகை/மண்தட்டு)

**ஃ இலக்கம் 6-10 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) அடையாளத்தையும் பிழையாயின் (✕) அடையாளத்தையும் அடைப்புக்குள் இடுக.**

6. சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகமொன்றை கட்டியெழுப்புதல் பொலிசாரின் பொறுப்பாகும். ( )
7. தொழில்நுட்ப மாற்றம் காரணமாக மனிதனின் நுகர்வுக் கோலம் மாற்றமடைந்துள்ளன. ( )
8. அதென்ஸ் நகராட்சியில் பெண்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் மட்டுமே ஆட்சி நடவடிக்கைகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ( )
9. 1987ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டத்தின் மூலம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன.( )
10. உள்ளூராட்சி மன்ற தலைவர் வரி தீர்வைகளை அறவிடும் அரச அதிகாரி ஆவார். ( )

kalvi.lk

**❖ இலக்கம் 11 - 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை இடைவெளியில் எழுதுக.**

11. உரு A இல் காட்டப்படுவது இலங்கையில் முதல் முதலாக உருவாக்கப்பட்ட ...................................... மாநகர சபை ஆகும்.

12. இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களுள் உமது பிரதேசத்துக்குறிய உள்ளூராட்சி மன்ற வகை ................................................ ஆகும்.



A

13. உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகள் தெறிவு செய்யப்படுவது வாக்களிப்பின் முலமும் ........................................ நியமனம் மூலமும் ஆகும்.

14. மாநகர சபையில் பிரதானி .......................................... ஆவார்.

15. சனநாயக நாடொன்றின் பிரஜையொருவர் கடமை ................................................ உடைய ஒரு தலைவரை உள்ளூராட்சி மன்ற தலைவராக தெரிவு செய்வதாகும்.

**♦ இலக்கம் 16 - 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

16. ஐக்கிய அமேரிக்காவின் அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக செயல்பட்ட சனாதிபதி
   1) தோமஸ் அல்வா எடிசன் 2) சார்ள்ஸ் டிக்கன்
   3) ஆபிரஹாம் லிங்கன் 4) பராக் ஒபாமா

17. உமது பாடசாலை கூட்டுறவு சங்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளுள் ஒன்று,
   1) கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளல்
   2) அங்கத்தவர் சேமிப்புக்கை பேணிவருதல்
   3) குறைந்த விலைக்கு நுகர்வு பொருட்களை பெற்றுக் கொள்ளல்
   4) விளையாட்டு மற்றும் பாடசாலை உபகரணங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளல்

18. வாக்களிப்பின் போது வாக்காளர் கவனம் செலுத்த வேண்டிய அம்சம்
   1) தனிப்பட்ட லாபம் பெறும் ஒருவரை தெரிவு செய்தல்
   2) தனது பிரதேசத்தை மட்டும் அபிவிருத்தி செய்பவரை தெரிவு செய்தல்
   3) தனது பரதேசத்தில் உள்ள பிரபல்யமான ஒருவரை தெரிவு செய்தல்
   4) மக்களுக்கு சேவையாற்றக் கூடிய நீதியான ஒருவரை தெரிவு செய்தல்

19. உள்ளூராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் சேவைகள் சம்பந்தமாக பொது மக்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளுள் ஒன்று
   1) வீதி அனுமதி பத்திரம் வழங்குதல்
   2) சுற்றாடல் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுத்தல்
   3) பொதுச் சொத்துக்களை பாதுகாத்து அவற்றை சிக்கனமாக பயன்படுத்தல்
   4) சட்ட விரோத கட்டடங்களை அகற்றுதல்

20. நற்பிரஜை என்ற வகையில் தேசத்தை கட்டியெழுப்புவதற்காக பின்பற்றக் கூடிய வழிவகைகளுள் ஒன்று
   1) தனது சொந்த வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளல்
   2) இலாப நோக்கில் செயற்படுதல்
   3) சமுகத்தால் தனக்கு கிடைப்பவற்றுக்கு மட்டும் கவனம் செலுத்தல்
   4) சமுகத்தால் தனக்கு கிடைப்பதை விட தன்னால் சமுகத்துக்கு வழஙகக் கூடிய பங்களிப்பு பற்றி கவனம் செலுத்தல்

(20x2=40 புள்ளி)

kalvi.lk

**குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය**

தரம் : **9** **பகுதி** II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. 1) சமுகப் பாதுகாப்புக்கு பாடசாலையின் பங்களிப்பு 2 தருக.
   2) இலங்கையில் தற்போது செயற்படும் நீதிமன்றங்களின் 2 வகையை எழுதுக.
   3) பொருளாதாரத்தின் மூன்று முக்கிய துறைகளுள் இரண்டினை குறிப்பிடுக.
   4) உம்மிடம் காணப்படும் நற்குணங்கள் இரண்டு எழுதுக.
   5) ஜனநாயகத்தில் இரண்டு பிரதான வகைகள் எவை?
   6) இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தும் தேர்தல் வகைகள் இரண்டு எழுதுக.
   7) பிரதித்துவ சனநாயகத்தை பின்பற்றும் நாடுகள் 2 தருக.
   8) உள்ளூராட்சி மன்ற பிரதானியின் அதிகாரங்கள் 2 எழுதுக.

(2x8=16 புள்ளிகள்)

2. 1) உரு B இல் காட்டப்பட்டுள்ளது சமுகப் பாதுகாப்பை வழங்கும் ஓர் உத்தியோகத்தவர் உடையதாகும் இவ் உத்தியோகத்தர் எந்த நிறுவனத்தின் கீழ் செயற்படுபவராவார்.
   2) இந்நிறுவனத்தின் மூன்று பிரதான பிரிவுகளும் எவை?
   3) மேலே தரப்பட்ட நிறுவனத்தினால் சமுகப் பாதுகாப்புகாக ஆற்றப்படும் சேவைகள் மூன்று எழுதுக.
   4) (அ) மேற்கூறப்பட் நிறுவனம் அல்லாது சமுக பாதுகாப்பு வழங்கும் வேறு சமுக நிறுவனங்கள் இரண்டு எழுதுக.
      (ஆ) சமுக பாதுகாப்புக்காக பாதுகாப்பு படை தொடர்பான தனிநபர் பொறுப்புகளும் கடமைகளும் 2 தருக. (11 புள்ளி)



B

3.



A B C

   1) இலங்கையில் பிரதான கலாச்சாரம் தொடர்பான படங்கள் மேலே A,B,C உருக்களால் காட்டப்பட்டள்ளது அவை எவ்வகை கலாச்சாரத்துக்குரியது என இனம் கண்டு எழுதுக.
   2) தொழில் நுட்பமாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ள சாதகமான, பாதகமான விளைவுகள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றை வெவ்வேறாக எழுதுக.

A - மனித தேவைகள் அதிகரித்தமை

B - மனிதர் பொருத்தமற்ற நுகர்வு கோலத்துக்கு மாறியமை

C - வேலை இலகுவாக்கப்பட்டமை D - மானிட சமுக தொடர்புகள் இலகுவாகியமை

E - மனித வாழ்வு இயந்திரமாகியமை G - வினைதிறன் அதிகரித்தமை


H - சுற்றாடல் மாசடைதல் வேகமடைந்தமை

| சாதகமான விளைவு | பாதகமான விளைவு |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |

(11 புள்ளி)

kalvi.lk

4. “நான் சூழலைப் பாதுகாப்பேன் என்னைப் பாதுகாப்பேன் உலகுக்கு பாரமாகாது எதிர்காலம் நோக்கி பாடசாலையிலே வழிகண்ட நல்ல பிள்ளை நான்”



1) இப்பாடலின் படி உம்மிடம் வளர வேண்டிய நற்குணங்கள் 2 எழுதுக.
2) இப்படத்தில் காட்டப்படுவது எச் சந்தர்ப்பத்தில் ஆகும். இவ்வாறான நற்பண்புகளை வாழ்க்கையல் கடைபிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் 3 எழுதுக.
3) (அ) ஒரு நாடோ அல்லது ஓர் இனமோ தனித்து வாழ முடியாத காரியமாகும் அதற்கான காரணங்கள் 3 எழுதுக.
(ஆ) ஏனைய நாடுகளுடன் அந்நியோன்யத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச அமைப்புகள் 2 எழுதுக. (11 புள்ளி)

5. 1) அரசியல் கட்சிகளை வகைப்படுத்திக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது அதனை பூரணப்படுத்துக.

அரசியல் கட்சி

A .................... B .................... C ....................

2) பிரசையொருவருக்குள்ள உரிமைகளும் கடமைகளும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வெவ்வேறாக வேறுபடுத்தி எழுதுக.
1) ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தல்
2) அங்கிகரிக்கப்பட்ட தொழிலொன்றை செய்தல்
3) சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடத்தல்
4) அரசினால் விதிக்கப்படும் வரிகளை உரிய முறையில் செலுத்தல்
5) தாம் விரும்பும் அரசியல் கட்சிக்கு வாக்களித்தல்
6) தேச துரோக செயல்களைத் தவிர்த்தல்
7) கல்வியைப் பெறுதல்
8) சமுக நல்லினக்கத்தை பாதுகாத்தல்

| பிரசையொருவரின் உரிமைகள் | பிரசையொருவரின் கடமைகள் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |

(11 புள்ளி)

6. 1) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற அமைப்புக்களின் மூலம் வழங்கப்படும் சேவைகள் 3 இனை பெயரிடுக.


A


B


C

kalvi.lk

2) இலங்கையில் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலதன வளத்தை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் 3 குறிப்பிடுக.

3) உமது பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி மன்றம் மூலம் கீழே தரப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இவ்விரண்டு வீதம் எழுதுக.

| நீர்வழங்கல் | கழிவுகளை அகற்றுதல் | டெங்கு ஒழிப்பு |
|---|---|---|
| 1<br>2 | 1<br>2 | 1<br>2 |

7. கீழே தரப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு பின்வரும் சட்டகத்தை பூரணப்படுத்துக.

மேலிருந்து கீழ்
1) பொது மக்களுக்கு தகவல் வழங்கும் ஓர் ஊடகம்
2) இவற்றின் சரணாலயம் குமணவில் உண்டு
3) காடுகளை வெட்டி நிலத்தை பனபடுத்தி மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை முறையாகும்
4) நற்பிரசையொருவரின் நற்பண்புகளில் ஒன்று
5) மனிதனின் வாழ்க்கைக் காலம்

இடமிருந்து வலம்
1) மனிதன் தனது நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கு பின்பற்றும் வழிமுறைகள் இவ்வாறு அழைக்கப்படும்.
3) இலங்கையில் பொருளாதார துறைகள் மூன்றில் இது ஒரு வகையாகும்.
5) மலைப்பிரதேசத்தில் ஊற்றெடுத்து கடலில் கலக்கும்
6) உயிருள்ள இயற்கை வளம்
7) இவர்களை வேலைக்கு அமர்த்துவது தண்டனைக்குறிய குற்றமாகும்
8) இதனை அனுபவிக்கும் நாம் அதனுடன் இனைந்த கடமைகயையும் சிறப்பாக செய்வது அவசியமாகும்

Education கல்வி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தொ | | | | | 2 | |
| | | | | | ற | |
| | | | | 3 | | |
| 6 கா | | | | | | |
| | | | 4 | | 5 | று |
| 7 | று | | | | | |
| | 8 | | மை | | ள் | |

(11 புள்ளி)

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457